மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி பொதுவானது, நீங்கள் உங்கள் தொகுதிக்குப் போய்விடாதீர்கள். திண்டுக்கல்லுக்குப் போய்விட்டால் சென்னைக்கு வருவது எப்போது? (சிரிப்பு)

திரு. என். வரதராஜன்: பல தடங்களில் 5 பேர், 10 பேர்களோடு பஸ் ஓடிக்கொண்டிருக்கிறது. சில தடங்களில் அதிகமான பேர்களுக்கு பஸ் கிடைக்காமல் இருக்கிறது. ஆகையால் மாவட்ட அளவில் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களையும், சட்டமன்ற மேலவை உறுப்பினர்களையும் கொண்ட குழுக்களை அமைத்து, அந்தக் குழுவின் மூலம் சரியாக ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, இலாபம் நோக்கம் இல்லை என்று சொன்னவுடனே அது பொது நோக்கம் அல்லது தேவையின் அடிப்படையில் இயக்கப் படுகிறது என்று பொருள். சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்டு குழு அமைத்து ஆய்வு நடத்த வேண்டுமென்று சொன்னார்கள். இப்போதே சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளை எல்லாம் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. ஆகவே, தனிக் குழு தேவையில்லை. எல்லோரும் கொடுக்கின்ற கோரிக்கைகளை வாங்கி பரிசீலித்தாலே சரியாக இருக்கும் என்று கருதுகிறேன்.

பேருந்துகளில் தீயணைப்புக் கருவிகள் பொருத்தும் திட்டம்.

*வினா எண். 58—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேருந்துகளில் தீயணைப்புக் கருவிகள் பொருத்தப் பட்டுள்ளனவா?

(ஆ) ஆம் எனில் அதை இயக்க ஓட்டுநர், நடத்துநருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் அனைத்துப் பேருந்துகளிலும், மற்றும் பாண்டியன், சேரன், கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகங்களில் உள்ள பெரும்பாலான பேருந்துகளிலும் தீயணைப்பு கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. மற்றப் போக்குவரத்துக் கழகங்களும் தங்கள் பேருந்துகளில் தீயணைப்பு கருவிகளை பொருத்துவதற்கான ஏற்பாடுகளை செய்துவருகின்றன.

(ஆ) மேற்கூறிய போக்குவரத்துக் கழகங்களில் உள்ள ஓட்டுநர், நடத்துநர்களுக்கு தீயணைப்புக் கருவிகளை இயக்க பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவிக்கின்ற நேரத்தில் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளில் தீ அணைப்புக் கருவிகள் பொருத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்கள். அதிலே ஓட்டுநர்களுக்கு சரியான பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவரவர்களே, அந்தப் பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறது.

வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த தின விழா.

*வினா எண் 44—திரு. க. பாரமலை: மாண்புமிகு செய்தி—அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டிய கட்டபொம்மன் நினைவுக் கட்டிடத்தில் ஒவ்வொரு வருடமும் ஜனவரி மாதம் 3ந் தேதியன்று வீரபாண்டிய கட்ட பொம்மன் பிறந்த தினவிழா அரசு விழாவாக நடத்தப்பட்டு அவ்விழா 1976 ஆம் ஆண்டிலிருந்து நடத்தப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அந்த விழாவை தொடர்ந்து நடத்தும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: (அ) 1974, 1975 ஆம் ஆண்டுகளில் நடைபெற்றது. 1976 ஆம் ஆண்டிலிருந்து 1980 வரை நடைபெறவில்லை.

(ஆ) அதன் பின்னர் 1981 ஆம் ஆண்டில் மே திங்கள் 8, 9 ஆகிய தேதிகளிலும் 1982-ல் மே திங்கள் 14, 15 தேதிகளிலும் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. ஆண்டுதோறும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் அந்தப் பகுதிக்குச் சென்றிருந்தபோது இந்தக் கருத்தை சொன்னார்கள். இந்த விழா தொடர்ந்து நடைபெறும் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (பதில் இல்லை)

விளாத்திகுளம் தாலுகா நயினார் சத்திரம் விநாயகர் கோவிலுக்குச் சொந்தமான நிலம்.

*வினா எண் 45—திரு. ப. நெடுமாறன்: திரு. க. பாரமலை: மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—